# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கூட்டாண்மைத் தகவல்கள் | 1 |
| 2. | தலைவரின் செய்தி | 2 - 3 |
| 3. | 2010, மார்ச்சு 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் | |
| | 1. கணக்காய்வாளரின் அறிக்கை | 4 |
| | 2. ஐந்தொகை | 5 |
| | 3. வருமானக் கூற்று | 6 |
| | 4. ஒப்புரவு மாற்றம் பற்றிய கூற்று | 7 |
| | 5. காசுப் பாய்ச்சற் கூற்று | 8 |
| 6. | நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 9 - 21 |
| 4. | நிதிசார் முக்கிய விடயங்கள் | 22 |

# கூட்டுக்குழுத் தகவல்

| | | |
|---|---|---|
| கம்பனியின் பெயர் | - | வரையறுத்த மில்கோ தனியார் கம்பனி |
| சட்ட நிலைமை | - | 1982 ஆம் ஆண்டு கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையில் ஒரு வரையறுத்த பொறுப்பு முயற்சிக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது. |
| பதிவு செய்யப்பட்ட அலுவலகம் | - | இல. 45, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05. |
| | - | தொ.பே. 0112586174, 0112582331-4, 0112586872 |
| | - | பெக்ஸ்: 0112368082 / 0115333328 |
| | | இணையதளம் : www.milco.lk |
| | - | மின்அஞ்சல்: info@milco.lk |
| தொழிற்சாலைகள் | - | கொழும்பு பாற் தொழிற்சாலை (சிஎம்எப்) |
| | - | அம்பேவெல உலர்த்திய பால் உற்பத்திச் தொழிற்சாலை (எஸ்டிஎம்எப்) |
| | - | திகன பாற் தொழிற்சாலை (டிஎம்எப்) |
| | - | பொலொன்னறுவை கட்டிப்பாற் தொழிற்சாலை (பிஎம்எப்) |
| கூட்டிணைக்கப்பட்ட திகதி | - | 1996.05.09 |
| மீளப் பதிவு செய்த திகதி | - | 2008 மே 19 |
| கம்பனிப் பதிவிலக்கம் | - | என் (பிவிஎஸ்) 17159 (பழயது) |
| | - | பிவி (2942 (புதியது) |
| கம்பனிச் செயலாளர் | - | வரையறுத்த இன்டநசனல் கன்சல்டன்சி மற்றும் கூட்டாண்மை சேவைகள் தனியார் கம்பனி |
| | - | இல. 160, பவுதாலோக்க மாவத்தை, கொழும்பு 04 |
| பணிப்பாளர் | - | திரு. குமார் அபேசிங்க தலைவர் |
| | - | திரு. என்.எம்.கே.பி. நவரட்த்ன பிரதிச் செயலாளர் |
| | - | திரு ரூமி ஜவுபர் (தொழிற்பாட்டுப் பணிப்பாளர்) |
| | - | திரு. டப்.டி.பி. பொன்சேக்கா பணிப்பாளர் |
| | - | திரு. டி. வெங்கடேச்வரன் பணிப்பாளர் |
| | - | திரு. சி.பி. ஹேரத் பணிப்பாளர் |
| | - | திரு. எஸ்.ஐ.எம்.எம். நஸ்வர் பணிப்பாளர் |
| | - | திரு-திருவாளர் எம் அனோமா நந்தனி ஜயமஹா பணிப்பாளர் |
| கணக்காய்வாளர்கள் | - | உள்ளக |
| | - | திருவாளர் எஸ்.எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ், இல. 02, காஸ்டல் லேன், கொழும்பு 03 |
| | - | வெளியக |
| | - | திருவாளர் அமரசேரக்கர அன்ட் கம்பனி, |
| | - | இல. 12, ரொடுண்டா காடண், கொழும்பு 03. |
| வங்கியாளர் | - | மக்கள் வங்கி |
| | - | இலங்கை வங்கி |

# தலைவரின் கூற்று

2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியின் செயலாற்றுகை பற்றிய தற்பொழுதைய மீளாய்வை சமர்பிப்பதில் நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

மீளாய்வு ஆண்டின் போது கம்பனியின் விற்பனையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 12 % வளர்ச்சியைக் காட்டுகின்றது. 2009 / 2010 ஆண்டின் ரூபா. 4.2 பில்லியன் விற்பனையுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டு விற்பனையானது ரூபா 4.7 பில்லியன் இலக்கினை எட்டியுள்ளது.

மீளாய்வு ஆண்டில் கம்பனியின் வரிக்கு முந்திய இலாபம் ரூபா 339 மில்லியனாக இருந்தது. 06 மாத காலத்துக்கான தொழிற்படு முதல் தொகையொன்றை கட்டியெழுப்புமாறு திறைசேரயினால் விடுத்த வேண்டுகோளின் படி, கம்பனியாது இற்றை வரை ரூபா 935 மில்லியன் தொகை ஒதுக்கத்தை உருவாக்கியுள்ளது. பால், மூலப்பொருள், பொதிசெய் பொருள் மற்றும் சம்பளம் முதலியவைக்கான கொடுப்பனவுக்காக தேவைப்படும் தொகை ரூபா 2.1 பில்லியன் தொகையாகும். இத் தேவை தொடர்பாக, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கி போன்ற வங்கிகளில் 8.5 % முதல் 9.0 % வரையான நியாயமான வருடாந்த வட்டி வீதத்தில் நிலையான வைப்புக்களில் ஒதுக்கங்கள் வைப்பிலிடப்பட்டுள்ளன.

**<u>பாற் சேகரிப்பு மற்றும் கொள்வனவு</u>**

பாரிய வெள்ள நிலைமையின் காரணமாக சுமார் 75,000 கால் நடைகள் இறந்தமையினால் கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியிலும் மற்றும் இவ் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலும் பால் சேகரிப்பானது தடைப்பட்டன. எவ்வாறாயினும், மில்கோ நிறுவனத்தின் சிறந்த கள முயற்சியால் தற்பொழுது பால் சேகரிப்பானது நாளொன்றுக்கு 185,000 லீட்டர் வரை கனிசமான அளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. இலங்கையின் சகல பாகங்களிலிருந்தும் மில்கோ நிறுவனத்திற்கு 2,300 விவசாயிகளைக் கொண்ட சமுகங்கள் பால் பொருட்களை வழங்குகின்றனர். நாடு பூராக 77 குளிரூட்டல் நிலையங்கள் பரந்து காணப்படுவதுடன் இவற்றிலிருந்து நான்கு தொழற்சாலைகளுக்கு இவ்விடங்களிலிருந்து பால் கொண்டு செல்லப்படுகின்றன. பால் சேகரிப்பு தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | லீட்டர் ( மில்லியன்கள்) | வளர்ச்சி % |
|---|---|---|
| 2006 | 53.46 | |
| 2007 | 53.98 | + 0.97 |
| 2008 | 53.40 | -1.07 |
| 2009 | 54.85 | +2.71 |
| 2010 | 55.51 | +1.20 |

**<u>பசும் பாலின் தரம்</u>**

சிறந்த பால் உற்பத்திகளை உற்பத்தி செய்யும் நோக்கில் உயிர்சத்து நிறைந்ததாகவும் பக்டிரியாக்களின் தொழிற்பாட்டை பேணிக் கொள்ளும் வகையில் பாலின் தரத்தை பேணுதல் பிரதான குறிக்கோளாக உள்ளது. இதன் ஒரு செயற்பாடாக கடந்த ஆண்டின் பிற்பகுதியிலிருந்து நாளாந்தம், குளிரூட்டல் நிலையங்களிலிருந்து தொழிற்சாலைகளுக்காக பால் சேகரிக்கப்பட்டு வருகின்றது. மேலும், சிறந்த பசும் பாலை பெற்றுக் கொள்வதற்காகவும் அடிப்படை சுகாதார செயற்பாடுகள் தொடர்பாக விவசாயிகளை அறிவுறுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**உற்பத்தி**

கொழும்பு (நாராஹேன்பிட்ட), திகன, அம்பேவள மற்றும் பொலொன்னறுவை போன்ற இடங்களில் உற்பத்தி வசதிகளை மில்கோ நிறுவனம் கொண்டுள்ளது. இலங்கை விவசாயிகளிடமிருந்து சேகரித்த பசும் பாலிலிருந்தே மொத்த பாற் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஹைலண்ட் உற்பத்திக் குறியின் கீழ் 10 வகைகள் மற்றும் 52 இருப்புச் சேகரித்தல் பிரிவுகள் வாடிக்கையாளர்களுக்காக நாடு பூராகவும் காணப்படுகின்றன. இவ் உற்பத்தி வகைகளாவன: கிருமி நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சுத்திகரித்த திரவப் பால், யோகட், ஐஸ்கிரீம், பட்டர், நெய், சீஸ், தயிர், கட்டிப் பால் மற்றும் முழு ஆடைப் பால் என்பனவாகும். இந்த உற்பத்திகளுக்கு மேலதிகமாக, ''ஹைலண்ட்'' ஸ்பிரிங்'' தூய்மையாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சொக்கலேட் என்பவற்றையும் அறிமுகம் செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

**விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்**

நாடு பூராகவும் மில்கோ நிறுவனத்தின் உற்பத்திகளை விநியோகம் செய்வதற்கு 115 விநியோகத்தர்கள் உள்ளனர். சந்தைப்படுத்தல் பிரிவு விற்பனை பிரதிநிதிகள் 26 பேர், பிராந்திய முகாமையாளர்கள் 07 பேர் மற்றும் நிருவாக அலுவலர்கள் 06 பேர் போன்றோர்கள் இந்த மேற்பார்வையை மேற்கொள்கின்றார்கள். மேலும், 50 பதவியினர்களைக் கொண்ட 11 விற்பனை நிலையங்களை கம்பனி கொண்டுள்ளது. இது தொடர்பாக நாடு 09 வலயங்களாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் உற்பத்திகளை புதுப்பித்தல் மற்றும் புதிய உற்பத்திகளை அடையாளம் காணல் போன்றன தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மில்கோ நிறுவனத்தின் பதவியினர்கள்**

எமது பதவியணியினர் தொடர்பாக 'தொழில்சார் பிரவேச அபிவிருத்தி' யை ஏற்படுத்தல் மிகவும் முக்கியமாக உள்ளது. பலதரப்பட்ட தொழிற் துறைகளுக்கு உரிய பதவியணியினர் தொடர்பாக பயிற்சிகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வருட முடிவில் பதவியணியினர் கணிப்பீடு செய்தல் தொடர்பாக முன்னோடி செயலாற்றுகை குறிகாட்டிகளைக் கொண்ட செயலாற்றுகை அபிவிருத்தி வழிகாட்டலொன்றை தயார் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அனுபவங்களைக் கொண்ட பதவியணியனர் குழாமாக இருப்பதனால் இது மில்கோ நிறுவனததிற்கு ஒரு வளமாக இருப்பதுடன் கம்பனியினுள் சகல சேவைப் பிரிவுகளுக்கும் உரிய 1430 ஊழியர் குழாத்தைக் கொண்டுள்ளது.

**பொது**

வெற்றிப் பாதைக்கு நுழைவதற்கான ஒரு சில சிக்கல்கள் காணப்பட்ட போதும் அவ் விடயங்களை மில்கோ நிறுவனம் சீர் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது. கம்பனியின் முன்னேற்றத்தை தடைபடுத்துகின்ற பிரதான காரணியாக காணப்படுவது, போதியளவான பாசும் பால் நாட்டில் இன்மையாகும். நாட்டில் பால் உற்பத்திகளுடன் தொடர்புடைய துறையில் 50% சதவீதமான விற்பனைப் பங்களிப்பை கைப்பற்றிக் கொள்வது எமது பிரதான குறிக்கோளாகும்.

இறுதியாக, மில்கோ கம்பனியின் முன்னேற்றப் பாதையில் பங்களிப்புச் செய்கின்ற அனைவருக்கும் மற்றும் விசேடமாக பாற் துறையில் ஈடுபடுகின்ற அனைவருக்கும் மில்கோ பணிப்பாளர் சபை சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன.

தலைவர்
வரையறுத்த மில்கோ (தனியார்) கம்பனி

வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கான

1. நாங்கள் 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தினத்துடன் முடிவவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றுக்கள், உரிமை மாற்றக் கூற்று ( ஒப்புரவு), மற்றும் அத்தினத்துடன் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சற் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு எண்ணக்கருக்களின் சுருக்கம் மற்றும் 02 ஆம் பக்கம் முதல் 18 ஆம் பக்கம் வரை குறிப்பிடப்பட்டுள்ள வேறு விளக்கங்கள் தொடர்பான குறிப்புக்களைக் கொண்ட வரையறுத்த மில்கோ (தனியார்) கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வுககளை மேற்கொண்டுள்ளோம்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

2. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணைவாக இந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் நியாயமான விதத்தில் சமர்பித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். இந்தப் பொறுப்புகளுக்குள் பிழை மற்றும் மோசடிகள் அற்ற விதத்தில் உரிய கணக்கீட்டு நியமங்களைத் தெரிவு செய்யும் போதும் தொடர்புபடுத்தும் போதும் மற்றும் சந்தர்ப்ப சூழ் நிலைக்கு ஏற்ப நியாயமானது என்று கருதுகின்ற கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயார் செய்யும் போதும் ஏற்படக் கூடிய கவனிக்க வேண்டிய பிழையான அறிக்கைகளிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல் மற்றும் நியாயமான விதத்தில் சமர்பிப்பதற்கு உகந்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை உரிவாக்குதல், அமுல்படுத்தல் மற்றும் அவற்றை சிறந்த முறையில் பேணிச் செல்லல் என்பன உள்ளடங்கும்.

கணக்காய்வு எல்லையும் அபிப்பிராயங்களுக்கான அடிப்படையும்

3. எங்களது கணக்காய்வின் படி இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கருத்தொன்றை வெளிப்படுத்துவது எமது பொறுப்பாக உள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணைவாக எமது கணக்காய்வை மேற்கொண்டுள்ளோம். அந்த கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளாவன நிதி அறிக்கைககள் கவனத்திற் கொள்ளத்தகு பிழைகள் இல்லாதது என்று நியாயமான தீர்ப்பொன்றை வழங்குவது தொடர்பாக எங்களுடைய திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதாகும்.
4. நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்ற தொகைகள் மற்றும் ஆதாரமாக இருக்கின்ற சான்றுகள் மற்றும் பரிசோதனை அடிப்படைகளை இந்தக் கணக்காய்வு உள்ளடக்குகின்றது. பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மூலதாரங்கள் மற்றும் முகாமை மேற்கொண்ட மதிப்பீடுகள் மற்றுமல்லாது சமர்பிக்கப்படுகின்ற முழு மொத்த நிதிக் கூற்று தொடர்பான மதிப்பீடொன்றையும் மேற்கொள்வதை கணக்காய்வானது உள்ளடக்குகின்றது.
5. 7, 8, 9 மற்றும் 10 ஆம் பக்கங்களில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தவிர எங்களுடைய கணக்காய்வின் நோக்கங்களாவன எங்களுடைய அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டியவரை கணக்காய்வு தொடர்பாக தேவையான அனைத்து தகவல்களையும் விளக்ககங்களையும் பெற்றுக் கொள்வதாகும். ஆகவே, எங்களுடைய அபிப்பிராயம் தொடர்பாக கணக்காய்வானது நியாயமான தகவல்களை வழங்குகின்றது என நாங்கள் நம்புகின்றோம்.

அபிப்பிராயம்

6. எங்களுடைய அபிப்பிராயங்கள், கீழ் குறிப்பிடப்பட்ட 7,8,9 மற்றும் 10 ஆம் விடயங்களில் கவனம் செலுத்தப்பட்ட விடயங்களைச் சீர் செய்தமையினால் நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தவிர, இதுவரை காட்டப்பட்டுள்ள எங்களுடைய புலனாய்வுகளில் எமது கம்பனி இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணைவாக 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஒழுங்கு முறையான கணக்கு அறிக்கைகளைப் பேணிச் சென்றுள்ளதென்றும், நிதி அறிக்கையானது 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிய வரை கம்பனியின் பணிகள், அதன் செயலாற்றுகைகள் மற்றும் அத் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிப் பாய்ச்சற் கூற்றின் ஊடாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமை காட்டப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கின்றோம்.

7. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பண்ணை தாங்கிகளின் கிரயமானது நிறையிட்ட சராசரி முறையின் படி கிரயக் கணக்கீடு செய்யும் போது பிழையாக 7.5 மில்லியன் தொகையினால் உயர்வாகக் கணக்கிடப்பட்டுள்ளது.
8. ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு அறிக்கையிடப்பட்ட சம்பளப் பட்டியல் மற்றும் பேரேட்டு நிலுவை என்பவற்றுக்கிடையில் ரூபா 12.5 மில்லியன் வித்தியாசம் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.
9. நிறுத்தி வைத்த வைப்புக்கள் மற்றும் மீளாய்வு வருடத்தின் போது காணப்பட்ட சொத்துக்கள் (போத்தல்கள் மற்றும் பொதி செய் பொருட்கள்) அடையாளம் காணப்படவில்லை. அதன் காரணமாக ஐந்தொகையின் பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 31.4 மில்லியன் பெறுமதியான வைப்புக்களின் பெறுமதி அதற்கு ஏற்ப பௌதீக சொத்துக்கள் நியாயமான விதத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

10. மேலும், நாங்கள் சாதாரண தினமொன்றில் முகாமைத்துவத்திற்கு சமர்பிக்கப்பட்ட முகாமைத்துவ அறிக்கையில் காட்டப்பட்ட மற்றும் அறிக்கையிடப்பட்ட காரணங்கள் பால் கவனத்தை செலுத்துவோம். இந்த அறிக்கை முகாமைத்துவத்திற்கு சமர்பிக்கப்பட்ட முகாமைத்துவ அறிக்கையுடன் இணைந்து வாசிக்கப்படுதல் வேண்டும்.

அவதானத்திற்கு பாத்திரமான விடயங்கள்

11. அபிப்பிராயத்தை விபரிக்காது, நாங்கள் எழுத்துருவிலான சாட்சிகள் இன்மையால் வரையறுத்த கிரியா (தனியார்) பாற் கம்பனியிடமிருந்து சுவிகரித்த நித்திய பொறுப்புக்கள் அல்லது அந்தப் பொறுப்புக்களை மீளச் செலுத்தும் நிபந்தனைகள் பற்றி நிச்சியப்படுத்திக் கூற முடியாது என்பது பற்றிய நிதி அறிக்கையின் குறிப்பு 13.2 பால் அவதானம் செலுத்துவோம்.

வேறு சட்ட மற்றும் ஒழுங்குவிதிகளின் தேவை பற்றிய அறிக்கை.

12. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 151 (2) ஆம் பக்கத்தின் குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் இந்த நிதிக் கூற்றுக்கள் இணங்குகின்றன.

பட்டயக் கணக்கறிஞர்கள்
கொழும்பு

# 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை

| | குறிப்பு | 2010 ரூபா. | 2009 ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் இயந்திரம் | 3 | 572,074,407 | 607,598,450 |
| கால் நடைகள் | | 444,255 | 407,971 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **572,518,662** | **608,006,421** |
| **நடைமுறைச் சொத்துக்க்ள்** | | | |
| இருப்புக்கள் | 4 | 530,342,807 | 343,534,136 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 5 | 734,377,711 | 610,576,211 |
| அறவிட வேண்டிய வரிகள் | | 10,493,879 | 10,493,879 |
| குறுங்கால வைப்புக்கள் | | 1,031,983,287 | 1,023,919,441 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | | 85,400,020 | 43,490,533 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **2,392,597,703** | **2,032,014,200** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **2,965,116,364** | **2,640,020,621** |
| **பங்கு முதலும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | | |
| பிரகடணப்படுத்திய மூலதனம் | 6 | 306,500,020 | 306,500,020 |
| பொறி மற்றும் இயந்திர விற்பனை மற்றும் Replacement / Upgrading of Plant and Machinery | 7 | 25,000,000 | 25,000,000 |
| தேய்வு நிதி | 8 | 1,689,978 | 1,689,978 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | | 336,454,462 | 336,454,462 |
| நிறுத்திவைத்த உழைப்புக்கள் | | 1,108,087,428 | 836,699,281 |
| **மொத்த பங்கு முதல் / ஒப்புரவு** | | **1,777,731,889** | **1,506,343,742** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| வட்டி பொறுப்பேற்கப்பட்ட கடன்கள் | 9 | 2,531,302 | 7,208,907 |
| வட்டி பொறுப்பேற்கப்படாத கடன்கள் மற்றும் பெறுகைகள் | 10 | 83,590,654 | 83,590,654 |
| நிறுத்தப்பட்ட அரச உதவுதொகைகள் | 11 | 22,567,086 | 21,953,383 |
| ஏனைய நிறத்தப்பட்ட பொறுப்புக்கள் | 12 | 125,097,698 | 103,544,305 |
| மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | **233,786,740** | **216,297,249** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார மற்றும் எனைய சென்மதிகள் | 13 | 797,110,764 | 801,678,569 |
| வருமானவரிப் பொறுப்புக்கள் | | 65,578,394 | 52,512,635 |
| வட்டி பொறுப்பேற்கப்பட்ட கடன்கள் மற்றும் பெறுகைகள் | 9 | 90,908,579 | 63,188,426 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | **953,597,736** | **917,379,630** |
| **மொத்த பங்கு முதல் / ஒப்புரவு மற்றும் பொறுப்புக்கள்** | | **2,965,116,365** | **2,640,020,621** |

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கும் வகையில் இந்த நிதிக் கூற்றுக்கள் காணப்படுகின்ற

*பிரதான நிதி அலுவலர்*

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரசெய்வதற்கும் சமர்பிப்பதற்கும் பொறுப்பாக பணிப்பாளர் சபை உள்ளது.
2010.11.03. ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் நிதிக் கூற்றுக்கள் அங்கிகரிக்கப்பட்டுள்ளன.

சபை சார்பாக கையொப்பமிட்டவர்கள்>

*பணிப்பாளர்* *பணிப்பாளர்*

Colombo,

# 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான

| | குறிப்பு | 2010<br>ரூபா | 2009<br>ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | **14** | 4,093,051,886 | 4,242,074,424 |
| விற்பனைக் கிரயம் | | (3,395,561,341) | (3,510,676,580) |
| **மொத்த இலாபம்** | | **697,490,545** | **731,397,844** |
| ஏனைய வருமானம் | **15** | 102,164,981 | 108,155,924 |
| விநியோக்க் கிரயம் | **16** | (100,074,952) | (80,936,209) |
| நிருவாக்க் கிரயம் | **17** | (332,794,333) | (377,459,901) |
| ஏனைய செலவினங்கள் | **18** | (27,097,320) | (27,650,520) |
| நிதிக் கிரயம் | **19** | (964,195) | (1,770,036) |
| **வரிக்கு முந்திய இலாபம்** | **20** | **338,724,726** | **351,737,102** |
| வருமானவரிச் செலவினம் | **21** | (27,871,953) | (19,580,847) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **310,852,773** | **332,156,255** |
| **பங்கொன்றுக்கான அடிப்படை உழைப்பு ( ரூ** | **22** | **10.14** | **10.84** |

| | பங்கு முதல் ரூபா. | காடணப்படுத்த மூலதனம் ரூபா. | மூலதன ஒதுக்கங்கள் ரூபா. | மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் ரூபா. | தேய்வு நிதி ரூபா. | றுத்திவைத்துள்ள உழைப்புக்கள் ரூபா. | மொத்தம் ரூபா. |
|---|---|---|---|---|---|---|---|
| **2008, ஏப்ரலில் உள்ளவாறு நிலுவைகள்** | 306,500,020 | | 25,000,000 | | 1,682,418 | 429,636,979 | 762,819,417 |
| பகிரங்கப்படுத்திய மூலதனத்துக்கான மாற்றல்கள் | (306,500,020) | 306,500,020 | | | - | - | - |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | - | - | - | 332,156,255 | 332,156,255 |
| திரண்ட நிதிக்கு மாற்றிய தொகை -( பங்கிலாபம் ) | - | - | - | - | - | (5,500,000) | (5,500,000) |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | - | - | - | 336,454,462 | - | - | 336,454,462 |
| முன்னைய வருடத்தின் மேலதிக / பற்றாக்குறை ஒதுக்கங்களின் காரணமாக அல்லது எடுகோள் மாற்றங்களினால் எழுந்த இலாபம் / நட்டம் | - | - | - | - | - | 80,412,977 | 80,412,977 |
| தேய்வு நிதிக்கு மாற்றிய நிதி | - | - | - | - | 6,930 | (6,930) | - |
| பேணி விற்பனை இலாபம் | - | - | - | - | 630 | - | 630 |
| **2009, மார்சில் உள்ளவாறு ஐந்தொகை** | - | 306,500,020 | 25,000,000 | 336,454,462 | 1,689,978 | 836,699,281 | 1,506,343,741 |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | - | - | - | 310,852,773 | 310,852,773 |
| திரண்ட நிதிக்கு மாற்றிய தொகை - (பங்கிலாபம்) | - | - | - | - | - | (39,464,626) | (39,464,626) |
| பேணி விற்பனை இலாபம் | - | - | - | - | | - | |
| **2009, மார்ச் 31 ல் உள்ளவாறு ஐந்தொகை** | - | 306,500,020 | 25,000,000 | 336,454,462 | 1,689,978 | 1,108,087,428 | 1,777,731,889 |

# 2010 ஆம் ஆண்டு மார்ச் மாத்த்துடன் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | குறிப்பு | 2010 ரூபா. | 2009 ரூபா. |
|---|---|---|---|
| **செய்பாட்டு நடவடிக்கைகளிலிரிந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| வரிக்கு முந்திய இலாபம் | | 338,724,726 | 351,737,102 |
| ***சீராக்கங்கள்*** | | | |
| பெறுமானத்தேய்வு | | 208,191,757 | 191,112,761 |
| முதலீடுகளிலிருந்தான வருமானம் | | (88,453,539) | (67,806,794) |
| பொறி, இயந்திரம் மற்றும் உபகரண விற்பனை இலாபம் ( நட்டம் ) | | (2,090,431) | (399,460) |
| ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள் | | - | (1,333,108) |
| வட்டிச் செலவினங்கள் | | 964,195 | 1,770,036 |
| குறிப்பிட்ட நலன் திட்டத்திற்கான ஏற்பாடுகள் | | 31,794,745 | 34,497,239 |
| திருப்பிய - உதவு தொகைகள் | | (583,453) | (1,359,963) |
| மீள்மதிப்பீட்டு நட்டம் | | - | 41,578,456 |
| இருப்புப் பதிவளிப்பு | | 25,778 | 23,813 |
| **தொழிற்பாடு முதல் மாற்றத்திற்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம் / நட்டம்** | | 488,573,777 | 549,820,081 |
| **தொழிற்பாடு முதல் மாற்றங்கள் ;** | | | |
| இருப்புக்கள் | | (186,870,732) | (31,241,879) |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | | (123,801,500) | (25,728,877) |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | | (4,567,806) | 94,429,097 |
| **தொழிற்பாட்டின் ஊடாக காசு உருவாக்கம்** | | 173,333,739 | 587,278,422 |
| செலுத்திய வட்டி | | (964,195) | (3,256,610) |
| செலுத்திய பணிக்கொடை | | (10,241,352) | (6,037,162) |
| செலுத்திய வருமான வரி | | (24,909,378) | (88,534) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் | | 137,218,814 | 577,896,116 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | | (172,971,880) | (161,033,169) |
| பொறி, ஆதனம் மற்றும் உபகரண விற்பனை வருமானம் | | 2,394,598 | 399,460 |
| செலுத்திய பங்கிலாபம் | | (29,361,442) | - |
| கிடைத்த வட்டி | | 81,432,195 | 60,800,339 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படித்திய தேறிய காசு** | | (118,506,529) | (99,833,370) |
| **நிதி செயற்பாட்டிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| வட்டிக் கடன்கள் மற்றும் பெறுகைகளின் மீளச் செலுத்தல்கள் | | (4,055,619) | (3,440,248) |
| குறுங்கால கடன்கள் மற்றும் பெறுகைகளிலிருந்தான தேறிய காசுப் பெறுகைகள் | | 1,197,156 | 12,954,033 |
| **நிதி செயற்பாடுகளில்ல் பயன்படுத்திய தேறிய காசு** | | (2,858,463) | 9,513,784 |
| **காசு மற்றும் காசுக்குச் சம்மானவைகளின் தேறிய அதிகரிப்பு / குறைவு** | | 15,853,822 | 487,576,530 |
| **ஆண்டு ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவைகள்** | | 988,537,684 | 500,961,154 |
| **ஆண்டு நிறைவில் காசும் காசுக்குச் சமமானவைகளும்.** (குறிப்பு) | 23 | 1,004,391,506 | 988,537,684 |

1. **கூட்டுத் தகவல்கள்**

1.1.1 **பொது**

வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனியானது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு இயங்கி வருகின்ற ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் பொறுப்புக் கம்பனியாகும்.

**“கிரிய மில்க் இன்டஸ்ட்ரீஸ் ஒப் லங்கா ( பிரைவட்) லிமிடட் “** என்ற பெயரின் கீழ் 1996 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். 2001 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மில்கோ (பிரைவட்) லிமிடட் என இந்தக் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இலங்கை அரசாங்கம் (GOSL) மற்றும் இந்திய தேசிய பண்ணை அபிவிருத்திச் சபை (NDDB) என்பவற்றுக்கிடையில் கைசாதிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி வரை மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் லங்கா நிறுவனத்திற்குச் உரித்துடையதும் பயன்படுத்தி வந்ததுமான சகல ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ( கணனி தவிர ) மற்றும் மேற்படி திகதிவரை மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் நிறுவனத்திற்கு குத்தகை உரித்துடையதும் பயன்படுத்தி வந்ததுமான காணி மற்றும் கட்டிடங்கள் 1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதி கம்பனிக்கு மாற்றம் செய்யப்பட்டன. கைமாற்றம் செய்யப்பட்ட நிகர சொத்துக்களின் பெறுமதி ரூபா 306,500,020/- ஆகும். மேலும், இலங்கை பொது தொழில் முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் திதியிட்ட கடிதத்தின் பிரகாரம், குத்தகைக் காணிகள் மற்றும் கட்டடங்களின் வருடாந்த குத்தகைத் தொகை ரூபா 20,427,900/- தொகையை கூட்டு முயற்சி தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கைவிட்டுள்ளது. எனினும், கூட்டு முயற்சி உடன்படிக்கையானது நீண்ட காலம் அமுலில் இருக்கவில்லை, மேற் கூறப்பட்ட அரசாங்கக் காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணக்குகளில் தேவையான திருத்தங்களை கம்பனி செய்திருக்கவில்லை.

இல. 45, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு 05 என்ற முகவரியில் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ளதுடன் தலைமை அலுவலகமும் அதே இடத்தில் அமைந்துள்ளது. இக் கம்பனியின் பாரிய தொழிற்சாலைகள் நாராஹேன்பிட்ட, அம்பேவல, திகன மற்றும் பொலொன்னருவை போன்ற பிரதேசங்களில் அமைந்துள்ளன.

1.2 **பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்**

ஆண்டின் போது, கம்பனியின் பிரதான செயற்பாடுகளாவன பால் சேகரித்தல், பதனிடல், பொதி செய்தல் மற்றும் பால் உற்பத்திகளை கையாள்தலும் விநியோகம் செய்தலும்.

1.3 **ஊழியர்களின் எண்ணிக்கை**

வருட முடிவின் போது நிறுவனத்தில் சேவையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை 1,523 ஆகும். (2009.03.31 ஆம் திகதியில் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 1,490 )

2. **முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்**

2.1 **பொதுக் கொள்கைகள்**

2.1.1 **நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்கான அடிப்படை**

2010. ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியில் உள்ள வாறு கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்களுடன் (நிதிக் கூற்றுக்கள்) ஐந்தொகை, வருமானக் கூற்றுக்கள், ஒப்புரவு மாற்றக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் பொருந்தும் வகையில் சகல ஆவணங்களுடன் இணங்குகின்றன.

இலங்கை ரூபாவில் சமர்பிக்கப்பட்டுள்ள இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய எண்ணக்கருவின் பிரகாரம் தயார் செய்யப்பட்டுள்ளன.

2.1.2 **ஒப்பீட்டுத் தகவல்**

கம்பனி கணக்கீட்டுக் கொள்கைகளை நிலையாக பிரயோகித்துள்ளதுடன் இக் கொள்கைகள் கடந்த வருடத்துன் ஒப்பீடு செய்யும் போது மாறாது காணப்படுகின்றன.

நடைமுறை ஆண்டு தொடர்பாக சமர்ப்பணம் செய்வதற்கு உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான போது முன்னைய வருட தொகைகள் மற்றும் சொற்கள் மீள ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

2.1.3 **வெளிநாட்டு நாணய பரிமாற்றம்**

சகல வெளிநாட்டு நாணயத்திலான கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டுள்ளன. இது கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்த சந்தர்பத்தில் நிலவிய நாணயமாற்று வீதத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டது. வருட முடிவில் குறிப்பிட்ட சந்தர்ப நாணய மாற்றுவீத்ததைப் பயன்படுத்தி வெறிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டிருந்த நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை ரூபாவிற்கு நாணய மாற்றம் செய்யப்பட்டுள்ளன. நாணயமல்லாச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அச்சந்தர்பங்களில் நிலவிய நாணயமாற்று வீத்திற்கு ஏற்ப பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளன. பெறுமதிகள் தீர்மானிக்கப்பட்ட போது எழுந்த இலாப நட்டங்கள் வருமானக் கூற்றுக்களில் கணக்கு வைப்புச் செய்யப்பட்டுள்ளன

### 2.1.4 வரிகள்

**(அ) நடைமுறை வரிகள்**

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறைவரிச் சட்டத்தின் 16 ஆம் பிரிவிற்கு ஏற்ப 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து ஐந்து வருடங்களுக்கு வருமான வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(ஆ) நிறுத்தி வைத்த வரி**

பொறுப்பு முறையில் நிறுத்தி வைத்தல் வரி தயார் செய்யப்பட்டுள்ளது. வருமான வரி தொடர்பாக விடயங்களை ஈடுபடுத்தும் போது அவை அடையாளம் காணப்பட்ட காலத்தின் போது நடைபெறுகின்ற கால மாற்றங்களுக்கு ஏற்ப வரித் தாக்கங்கள் நடைமுறை வரிச் சதவீத மாற்றங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

குறைக்கக் கூடிய சகல மாற்றங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்களுக்கு பொருத்தமான வகையில் நிறுத்தி வைத்த வரிச் சொத்துக்களை அடையாளம் கண்டு அவற்றை வரியிற்கு உட்பட்ட பயன்படுத்தாத வரி நட்டங்களில் குறைக்கத்தக்க கால மாற்றங்களுக்கு இணங்கும் வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிறுத்தி வைத்த வரிச் சொத்துக்களின் பெறுமதி ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிற்கு ஏற்ப கவனத்திற் கொண்டு போதியளவான வரியினை விதிக்கத்தக்க இலாபம் மேலும் பெற்றுக் கொள்ள முடியாத வகையில் குறைத்து நிறுத்திய சொத்துக்களை அவ்வாறே அல்லது அதன் பகுதியொன்றை பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் பயன்படுத்தப்பட்டுள்து.
எவ்வாறாயினும், கம்பனி அனுபவித்த வரி விலக்குக் காலப் பகுதியின் படி நிறுத்தி வைத்தல் வரிக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

## 2.2 சொத்து மதிப்பீடும், மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்திய அடிப்படையும்.

### 2.2.1. இருப்புக்கள்.

முழுமையான மற்றும் மெதுவாக அசைகின்ற பொருட்களுக்கான நிலுவை கொடுப்பனவுகளை மேற்கொண்டதன் பின்னர், குறைந்த கிரயப் பெறுமதியின் படியும் நிகர கைத்தேறிய பெறுமதியிலும் இருப்புக்கள் மதிப்பிடப்பட்டுள்ளன. மதிப்பிடப்பட்ட உற்பத்திக் கிரயம் மற்றும் விற்பனை செய்வதற்கு மதிப்பிடப்பட்ட கிரயம் என்பவற்றைக் கழித்த பின்னர் சாதாரண விற்பனை நிலைமையில் இருப்புக்கள் விற்பனை செய்யக் கூடிய விலை நிகர கைததேறிய பெறுமதக எனப்படும்.

இருப்புக்களை தற்பொழுதைய இடத்திற்திற்கும் நிலைமைக்கும் கொண்டு வருவதற்கு ஏற்பட்ட செலவீனங்கள் பின்வரும் கிரய சூத்திரத்தின் படி கணக்கிடப்படும்:-

மூலப்பொருள் - கிரயத்தில்

முடிவுப் பொருட்கள் - திகன பாற் தொழிற்சாலை, கொழும்பு பாற் தொழிற்சாலை – கிரயத்தில்

அம்பேவலை – கிரயத்தில்

மிருக உணவு – கிரயத்தில் ( நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் கிரயம் மதிப்பிடப்படுகின்றன )

அறைகுறை வேலை – உள்ளீடு செய்யப்பட்ட மூலப் பொருட்களின் கிரயத்தில்

ஏனைய இருப்புக்கள் - ( உதா. நுகர்வுப் பொருட்கள் மற்றும் பகுதிகள் ) – கிரயத்திலும் (நிறையிடப்பட்ட சராசரி) வழியில் உள்ள சரக்கு – கிரயத்தில்

### 2.2.2. வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள்

அறவிட முடியாத கடன்கள் மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள் நீங்கலாக மதிப்பிடப்பட்டுள்ள நிகரப் பெறுமதியில் வியாபார கிடைப்பனவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏனைய கிடைப்பனவுகள் கிரயததிலிருந்து அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள் நீங்கலாக அங்கிகரிக்கப்பட்டுள்ளன.

### 2.2.3. காசும் காசுக்குச் சமமானவைகளும்

கையில் உள்ள காசு, கேள்வி வைப்புக்கள் மற்றும் குறுங்கால அதி உயர் திரவத்தன்மையான முதலீடுகள், அறியப்பட்ட தொகைகளாக மாற்றுவதற்கு தயார் நிலையில் உள்ள தொகைகள் மற்றும் பெறுமதி மாற்றம் தொடர்பான கனிசமான ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடியவைகள் காசும் காசுக்கு சமமாவைகளாகவும் வரையறுக்கப்படும்.

காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கங்களுக்காக, கையில் உள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள வைப்புக்களிலிருந்து வங்கி மேலதிகப் பற்றுக்கள், குறுங்கால முதிர்வுடன் கூடிய முதலீடுகள் ( கொள்வனவு செய்த திகதியிலிருந்து கழித்த அல்லது மூன்று மாதங்கள் ) என்பன காசுக்குச் சமமானவைகளாக கருதப்படுகின்றன.

### 2.2.4. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

**(அ) கிரயம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் திரண்ட பெறுமானத் தேய்வினைக் கழித்த பின்னரான கிரயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிதிக் கூற்றுக்களின் குறிப்பு இல 1.1 இல் விபரிக்கப்பட்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம், மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் லங்கா கம்பனி லிமிடடிற்குச் சொந்தமானதும் அக்கம்பனி பயன்படுத்தியதுமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பிரதான அரச மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் கம்பனிக்கு மாற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், அவ்வாறான பெறுமதிகள் கிடைக்காமையினால், 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் திகதி திகதியிடப்பட்ட அவர்களுடைய கடித்தின் ஊடாக இலங்கை பொது முயற்சிகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம், 1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதியில் உள்ளவாறு மில்க் இன்டஸ்ரீஸ் ஒப் லங்கா கம்பனி லிமிடடின் புத்தகங்களில் உள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் புதிய கம்பனியின் புத்தகப் பெறுமதியில் மாற்றப்பட்டன.

இந்தச் சொத்துக்களை கம்பனிக்கு கையளித்த திகதியில் இந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பௌதீக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. மில்க் இன்டஸ்ர்ரீஸ் ஒப் லங்கா கம்பனி லிமிடடினால் மேற்கொள்ளப்பட்ட பெறுமதிச் சேர்க்கைக்கு புறம்பாக காணி மற்றும் கட்டிடம் என்பன ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கிடப்படவில்லை.

**(ஆ) நிறுவல் கிரயங்கள்**

ஆரம்பத்தில் கணிப்பீடு செய்த செயலாற்றுகை நியமங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகளை நிலை நிறுத்திக் கொள்வதற்கும் பேணிக் கொள்ளும் நோக்கிலும் ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் திருத்தம் மற்றும் பராமரிப்பு தொடர்பாக ஏற்பட்ட செலவீனங்கள் ஏற்பட்ட சந்தர்பத்தில் ஒரு செலவாக அங்கிகரிக்கப்பட்டுள்ளன.

**(இ) பெறுமானத் தேய்வு**

காணி தவிர்ந்த சகல ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தின் படி நேர் கோட்டு முறையினைப் பயன்படுத்தி பெறுமானத் தேய்வு ஏற்பாடுகள் கணக்கிடப்பட்டுள்ளதுடன் பெறுமானத் தேய்வுகளை பதிவளிப்பதற்காக பின்வருமாறு ஆயுட்காலங்கள் மதிப்பிடப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கட்டிடங்கள் 20 வருடங்களுக்கு மேல் | |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 06 வருடங்களுக்கு மேலிருந்து 10 வருடங்கள் வரை |
| தளபாடங்கள மற்றும் பொறுத்துக்கள் | 03 வருடங்களுக்கு மேலிருந்து 05 வருடம் வரை |
| ஆய்வு கூட உபகரணம் | 03 வருடங்களுக்கு மேலிருந்து 05 வருடம் வரை |
| மோட்டார் வாகனங்கள் | 02 வருடங்களுக்கு மேல் 04 வருடங்கள் வரை |
| கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 03 வருடங்களுக்கு மேல் 10 வருடம் வரை |
| அலுவலக உபகரணம் | 2.5 வருடங்களுக்கு மேல் 05 வருடங்கள் வரை |
| போத்தல்கள் மற்றும் கிரேட்ஸ் | 04 வருடங்களுக்கு மேல் |
| கணனிகள் | 02 வருடங்களுக்கு மேல் 04 வருடங்கள் வரை |
| போத்தல் குளிராக்கி | 2.5 வருடங்களுக்கு மேல் 04 வருடங்கள் வரை |
| மென்பொருள் 03 வருடங்களுக்கு மேல் | |
| பாற் பேணிகள் 05 வருடங்களுககு | |

### 2.2.5. குத்தகை

**நிதிக் குத்தகைகள்**

குத்தகை ஆதனங்களின் உரிமைகளுடன் தொடர்பான திடீர் நன்மைகள் மற்றும் ஆபத்துக்களை வினைத்திறனாக மாற்றுகின்ற நிதிக் குத்தகைகள் தொடர்பான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் அவற்றின் பணப் பெறுமதியில் மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் அவை தொடர்ச்சியாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதுடன் குத்தகை ஆதனங்களின் பயன்பாட்டிலிருந்து நன்மையடைவதற்கு எதிர்பார்க்கின்றது.

குத்தகைக்கு வழங்கியவருக்குச் செலுத்த வேண்டிய ஆரம்பத் தொகை பொறுப்பொன்றாகக் காட்டப்பட்டுள்ளன. எஞ்சிய பொறுப்பு, நிலுவைப் பொறுப்புகள் தொடர்பாக சமமான வட்டி வீத்ததை விதிக்கும் நோக்கில் நிதிக் கட்டணங்கள் மற்றும் குத்தகைப் பொறுப்புக் குறைப்பு என்பவற்றுக்கிடையில் குத்தகைக் கட்டணங்கள் பகிர்வு செய்யப்படுகின்றன. குத்தகை தொடர்பாக செலுத்த வேண்டிய வட்டி வருடங்கள் பூராக குத்தகை தொக்குக் கணக்கிட்டுக்கு மாற்றப்படுகின்றன. ஒவ்வொரு நிதியாண்டுக்கும் பிரயோகிக்கப்படக் கூடிய வாடகை பொறுப்புக்களின் வட்டித் தொகை மெய் பெறுமதி முறையில் குத்தகைக் காலத்தின் போது வருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்டுள்ளன.

## 2.3. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

### 2.3.1 ஓய்வூதிய நன்மை தொடர்பான கடப்பாடுகள்

(அ) வரையறுக்கப்பட்ட நலன் திட்டம் - பணிக்கொடை
எதிர்வு கூறப்பட்ட கடன் முறையினைப் பயன்படுத்தி ஐந்தொகைக் திகதியில் வரையறுக்கப்பட்ட நலன் பொறுப்புக்களின் தற்பொழுதைய பெறுமதியாக ஐந்தொகையில் அங்கிகரிக்கப்பட்ட பொறுப்புக்கள் காணப்படுகின்றன.
எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கு ஏற்ப தொடர்ச்சியாக ஐந்து வருட சேவைக் காலத்தின் பின்னர் மாத்திரமே பணிக் கொடை தொடர்பான பொறுப்புக்கள் எழுகின்றன.
பணிக்கொடை பொறுப்புக்கள் வெளியக ரீதியாக நிதியளிக்கப்படுவதில்லை. இந்த விடயங்கள் ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் குழுப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்.
உரிய நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பொறுப்புப் பங்களிப்பு தொடர்பாக ஊழியர்கள் தகுதியுடையவர்கள். ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு ஊழியர்களின் மொத்த சம்பளங்களில் முறையே 12 சதவீம் மற்றும் 03 சதவீத்தை கம்பனி பங்களிப்புச் செய்கின்றது.

## 2.4 நன்கொடைகள் மற்றும உதவு தொகைகள்

முக விலையில் நன்கொடைகள் மற்றும் உதவு தொகைகள் அங்கிகரிக்கப்பட்டுள்ளதுடன் கிடைக்கவுள்ள நன்கொடைகள் அல்லது உதவு தொகைகள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் நியாயமான உறுதிப்பாடு தொடர்பாக ஏதேனும் இருப்பின் அவை இணக்கம் செய்யப்படும். செலவீன விடயம் ஒன்றுடன் நன்கொடை அல்லது உதவுதொகைகள் தொடர்புபடுகின்ற போது, குறிப்பிட்ட காலப் பகுதிகளுக்கான வருமானமாக அங்கிகரிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு ஒழுங்கு முறையான வித்தில் இழப்பீடு செய்யும் நோக்கில் கிரயங்களுடன் இணைப்புச் செய்தல் முக்கியமாகும்.

நாணயமல்லா நன்கொடைகள் உள்ளடங்கலாக சொத்துக்களுடன் தொடர்புடைய நன்கொடைகள் மற்றும் உதவு தொகைகள் முக விலையில் ஐந்தொகையில் காட்டப்படுவதுடன் அச் சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தின் பிரகாரம் வருமானக் கூற்றுக்களுக்கு செலவு வைக்கப்படுகின்றது.

## 2.5 வருமானக் கூற்று

### 2.5.1 வருமான அங்கிகாரம்

பொருளாதார நன்மைகளை கம்பனி அனுபவிப்பதற்கு தாக்கம் செலுத்தும் வகையில் மற்றும் அது தொடர்பாக ஏற்பட்ட விதத்தில் அல்லது அவ்வாறில்லையாயின் விசுவாசமான விதத்தில் கணக்கிடக் கூடிய விதத்தில் செலவினம் மற்றும் வருமானங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. வர்த்தகக் கழிவுகள் மற்றும் விற்பனை வரிகளின் கிடைக்க உள்ள தேறிய மற்றும் கிடைத்த கொள்வனவு மதிமானத்தின் முக விலையில் வருமானம் மதிப்பிடப்பட்டுள்ளது. வருமான அங்கிகார நோக்கத்துக்காக பின்வரும் விசேட பிறமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**(அ) உற்பத்திப் பொருட்களின் விற்பனை**

